# பத்திரிக்கைச் செய்தி

## வருமானத்திற்கு அதிகமாக 2,06,69,427 (85 சதவீதம்) சொத்து சேர்த்த வழக்கில் ஈரோடு மின்சார வாரிய முன்னாள் முதன்மை பொறியாளர் மற்றும் அவரது மனைவிக்கு 5 வருட கடுங்காவல் தண்டனையும், தலா ரூ.50 லட்சம் (மொத்தம் ஒரு கோடி) அபராதமும் விதித்து தீர்ப்பு

திரு.கே.ஜி.நடேசன், ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மின் நுகர்வோர் மற்றும் மின் பகிர்மாண கழகத்தில் முதன்மை பொறியாளராக பணிபுரிந்து வந்தார். அவர் மீது ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் கடந்த 2008ம் ஆண்டு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தமைக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவரது வீடு மற்றும் வங்கியில் சோதனை நடத்தப்பட்டு வங்கி லாக்கரில் கணக்கில் வராத ரூ.86 லட்சம் மற்றும் பல லட்சம் மதிப்பு கொண்ட நகைகள் கண்டறியப்பட்டன. மேலும் வழக்கு விசாரணையின்போது 100 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டன. வழக்கின் சொத்து குவிப்பு சோதனை காலமானது 01.01.1996 முதல் 31.07.2008 வரை கணக்கீடு செய்யப்பட்டு, அவர் வருமானத்திற்கு அதிகமாக ரூ.2.06.69,427/- (85 சதவீதம்) அவருடைய பெயரிலும் அவருடைய மனைவி பெயரிலும் சேர்த்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு ஈரோடு முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 29.11.2022 முதலாவது எதிரியான திரு.கே.ஜி.நடேசன் அவர்களுக்கு 5 வருடங்கள் கடுங்காவல் தண்டனையும் ரூ.50,00,000/- அபராதமும், இரண்டாவது எதிரியான அவரது மனைவிக்கு 5 வருடங்கள் கடுங்காவல் தண்டனையும் தலா ரூ.50,00,000/- அபராதமும் (மொத்தம் ஒரு கோடி) விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.